புரட்சிப்
# பெரியார் முழக்கம்

www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • ஜுலை (JULY) 23, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 30 • விலை(PRICE) ரூ.6.00


# ‘ஆணவக் கொலை’ தடுப்புச் சட்டம் வருமா?

***கருநாடக மாநில அரசைப் பின்பற்றி தமிழ்நாட்டில் ஆணவப் படுகொலை சட்டம் கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தி முன்னாள் நீதிபதி சந்துரு ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ ஜூலை 17, நாளேட்டில் எழுதிய கட்டுரை.***

திருமணச் சட்டங்களில் வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றங்களை உருவாக்கிய தமிழ்நாடு, ஜாதி அடிப்படையிலான ஆணவக் குற்றங்களைத் தடுக்க தனிச்சட்டம் கொண்டுவருவதில் ஏன் இன்னும் தாமதிக்கிறது? கர்நாடகா ஏற்கனவே சட்டம் இயற்றியுள்ளது. நாம் ஏன் இல்லை?

இந்தக் கொலைகளில் எந்தவிதமான "குடும்ப கௌரவமும்" இல்லை. இத்தகைய ஜாதி அடிப்படையிலான ஆணவக் குற்றங்களைத் தடுக்க தமிழ்நாடு உடனடியாக ஒரு தனிச்சட்டத்தை இயற்ற வேண்டிய அவசியம் உள்ளது. சமூக நீதி மற்றும் முற்போக்கு சீர்திருத்தங்களில் நூற்றாண்டு பாரம்பரியம் கொண்டதாக பெருமை பேசும் தமிழ்நாட்டில், "ஆணவக் கொலைகளைத்" (Honour Killings) தடுக்க தனிச்சட்டம் தேவையா? என்ற விவாதம் இன்னும் தொடர்கிறது. இதேவேளை, கர்நாடகா 2025, மார்ச் மாதத்தில் இதற்கென ஒரு சட்டத்தை இயற்றி இந்தத் துறையில் முன்னோடியாகத் திகழ்கிறது.

**“கர்நாடகா திருமணத் தேர்வு சுதந்திரம் மற்றும் ஆணவம், பாரம்பரியம் என்ற பெயரில் நடைபெறும் குற்றங்களைத் தடுக்கும் மற்றும் தடைசெய்யும் சட்டம், 2025 (*Karnataka Freedom of Choice in Marriage and Prevention and Prohibition of Crimes in the Name of Honour and Tradition Act, 2025*) பொதுவாக "எவ நம்மவா" (*Eva Nammava*)”** சட்டம் என அழைக்கப்படுகிறது. இந்தச் சட்டம் 16-ஆம் நூற்றாண்டு தத்துவஞானி பசவண்ணர் அவர்களின் வாக்கியத்தை மேற்கோள் காட்டுகிறது:

***"அவர்கள் யார் என்று கேட்காதீர்கள்; அவர்கள் நம்மவர்களே."*** என்பது பசவண்ணா கூற்று. இந்தச் சட்டத்தின் பிரிவு 4-ன் படி, திருமணம் செய்ய விரும்பும் இரு வயது வந்த சம்மதமுள்ள நபர்கள் மாவட்ட ஆட்சியர் அல்லது நியமிக்கப்பட்ட அதிகாரியிடம் பாதுகாப்பு கோரி அணுகலாம். அவர்களின் குடும்பத்தினர், உறவினர்கள் அல்லது சமூக அமைப்புகளின் அழுத்தத்தின் பேரில் அந்தத் தம்பதியினருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாதபடி உள்ளூர் காவல்துறை உறுதி செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டில் கடந்த மூன்று தசாப்தங்களாக ஆட்சியில் இருந்த அரசுகள் இதுபோன்ற தனிச்சட்டத்தை இயற்றுவதில் தயக்கம் காட்டி வந்துள்ளன. அண்மையில் சமூக நீதி அமைச்சர் வன்னி அரசு, நீதிபதி கே.என். பாஷா தலைமையிலான குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்த பிறகு, ஜாதி அடிப்படையிலான ஆணவக் கொலைகளைத் தடுக்க தனிச்சட்டம் இயற்ற முதலமைச்சரிடம் வலியுறுத்துவேன் என்று கூறினார். ஆனால் இந்தக் கருத்தை அவர் தனிப்பட்ட முறையில் வெளியிட்டதாகவும், தற்போது இத்தகைய சட்டத்தை இயற்றுவதில் அரசுக்குள் கருத்து வேறுபாடுகள் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஜாதிப் பாகுபாட்டை ஒழிக்கப் பணிபுரியும் ஒரு தன்னார்வ அமைப்பு, 2016-இலேயே, கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் ஜாதி மறுத்து திருமணம் செய்ததற்காக 80-க்கும் மேற்பட்ட தம்பதிகள் கொல்லப்பட்டதாக தெரிவித்தது. இந்தச் சம்பவங்கள் அதிகரித்ததைத் தொடர்ந்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) எடப்பாடி கே. பழனிசாமி அரசிடம் தனிச்சட்டம் கொண்டுவர வலியுறுத்தியது. ஆனால் அப்போதைய துணை முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம், ஏற்கனவே உள்ள குற்றவியல் சட்டங்களே போதுமானவை என்று கூறி தனிச்சட்டத்தை எதிர்த்தார்.

லதா சிங் எதிர் உத்தரப் பிரதேச அரசு (2006) வழக்கில் உச்சநீதிமன்றம், ஜாதி மற்றும் மதம் கடந்து திருமணம் செய்யும் தம்பதிகளுக்கு எதிரான வன்முறையைக் கடுமையாகக் கண்டித்தது. ஜாதி அமைப்பு ‘நாட்டின் சாபம்’ என்று குறிப்பிட்ட உச்ச நீதிமன்றம், ஜாதி மறுப்பு திருமணங்கள் தேசிய நலனுக்குப் பயன்படுகின்றன என்றும், அவை ஜாதித் தடைகளை உடைக்க உதவுகின்றன என்றும் கூறியது. மேலும், ஒவ்வொரு வயது வந்த நபருக்கும் தன் விருப்பப்படி திருமணம் செய்து கொள்ளும் அடிப்படை உரிமை இருப்பதாகவும், பெற்றோர் விரும்பவில்லை என்றால் உறவைத் துண்டிக்கலாம்; ஆனால் மிரட்டவோ, தொந்தரவு செய்யவோ அல்லது வன்முறையில் ஈடுபடவோ உரிமை இல்லை என்றும் தெளிவுபடுத்தியது. அதுமட்டுமல்லாமல், இத்தகைய தம்பதிகளுக்குக் காவல்துறையும் நிர்வாகமும் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும், அவர்களை மிரட்டுபவர்கள் அல்லது தாக்குபவர்கள் மீது உடனடியாக குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

இருப்பினும், ஒன்றிய அரசு இதுகுறித்து மாநிலங்களுக்கு அறிவுரைகள் வழங்கியதைத் தவிர பெரிதாக எதையும் செய்யவில்லை. 2009-ஆம் ஆண்டு அப்போதைய மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம், ஆணவக் கொலைகள் தொடர்பான தனிப்பட்ட புள்ளிவிவரங்கள் தேசிய குற்றப் பதிவுத் துறையிடம் இல்லை என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். இத்தகைய குற்றங்கள் பெரும்பாலும் குடும்ப விவகாரங்களாக மறைக்கப்படுவதால் அவற்றை தனி வகையாகப் பதிவு செய்வது கடினம் என்றும் அவர் கூறினார். பின்னர் நீதிபதி பி.வி. ரெட்டி தலைமையிலான சட்ட ஆணையம் தனது 242-வது அறிக்கையில், ஆணவக் குற்றங்களைத் தடுக்க தனிச்சட்டம் தேவை என்று பரிந்துரைத்தது. திருமணங்களை எதிர்த்து சமூகக் கூட்டங்கள் நடத்துதல் அல்லது சமூகப் புறக்கணிப்பை திணித்தல் போன்றவை சட்டவிரோதக் கூட்டமாகக் கருதப்பட வேண்டும் என்றும், அவற்றுக்கு கட்டாய குறைந்தபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்தது. இதன் அடிப்படையில் *"Prevention of Crimes in the Name of Honour and Tradition Bill, 2010"* என்ற மசோதாவையும் மத்திய அரசு மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தியது. 2021-இல் திமுக ஆட்சிக்கு வந்த பிறகு, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகள் தனிச்சட்டம் கோரி அழுத்தம் கொடுத்தன. இதையடுத்து நீதிபதி கே.என். பாஷா தலைமையில் குழு அமைக்கப்பட்டது. சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு, சி. ஜோசப் விஜய் தலைமையில் புதிய அரசு பொறுப்பேற்றது. பதிவுத்துறை அமைச்சர் லோகேஷ் தமிழ்செல்வன், "காதலுக்கு சிவப்பு நாடா முறை இருக்காது" என்று அறிவித்து, திருமணப் பதிவு எளிதாக நடைபெறும் என உறுதியளித்தார். திருமணப் பதிவுக்கு பெற்றோரின் சம்மதம் அல்லது வருகை தேவை என்ற முந்தைய அரசின் சுற்றறிக்கையும் சட்டவிரோதமானது என ரத்து செய்யப்பட்டு, துணைப் பதிவாளர்கள் எந்தத் தடையும் இல்லாமல் திருமணங்களைப் பதிவு செய்ய உத்தரவிடப்பட்டனர்.

ஆனால், முற்போக்கான அறிவிப்புகள் இருந்தபோதிலும், ஜாதி அடிப்படையிலான ஆணவக் குற்றங்களைத் தடுக்க தனிச்சட்டம் இயற்றுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இல்லை. நீதிபதி கே.என். பாஷா குழுவின் பதவிக்காலம் ஆகஸ்ட் நடுப்பகுதியில் முடிவடைய உள்ளது. அது நீட்டிக்கப்படுமா? என்பதும் தெளிவாக இல்லை. உண்மையில், இத்தகைய சட்டம் தேவையா? என்று தொடர்ந்து விவாதிப்பதை விட, இந்தப் பிரச்சினைக்கு உறுதியான சட்டரீதியான தீர்வை உருவாக்குவதே காலத்தின் தேவை.

எனவே, கர்நாடகாவின் **‘எவ நம்மவா’** சட்டத்தின் சிறந்த அம்சங்களை எடுத்துக்கொண்டு, தமிழ்நாட்டிலும் அதேபோன்ற ஒரு சட்டத்தை இயற்றுவது பொருத்தமானதாக இருக்கும். சமூக நீதியின் நீண்ட பாரம்பரியம் கொண்ட தமிழ்நாட்டில், அந்தச் சட்டத்திற்கு ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற திருக்குறள் வரியைப் பெயராக வைப்பதைவிட பொருத்தமானது வேறு எதுவும் இருக்க முடியாது. இது நீண்ட காலமாக நிலுவையில் உள்ள ஒரு சட்டத் தேவையாகும்.

## ஈழத்தமிழர்களுக்காக கழகத் தோழர்கள் நடத்திய போராட்டம்

# 13–ஆண்டுகளுக்கு பிறகு விடுதலை!

2013-ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், சென்னை மைலாப்பூர் தபால் நிலையத்தில் பெட்ரோல் குண்டு வீசி சேதம் விளைவித்ததாகக் கூறி, திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் தபசி குமரன், உமாபதி, ராவணன், மனோகரன், மாரிமுத்து, ஜான்சன் மற்றும் முகிலன் ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. 13 ஆண்டுகளாக வழக்கு நடந்தது. தோழர்கள் நீதிமன்றம் சென்று வந்தனர். இது ஈழத் தமிழர்களுக்காக கழகத் தோழர்கள் நடத்திய போராட்டம்.



இவ்வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, சென்னை சிங்காரவேலர் மாளிகையில் செயல்பட்டு வரும் 15-வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வந்தது. வழக்கு விசாரணையின் போது, அரசு தரப்பில் ஆஜர்படுத்தப்பட்ட அனைத்து சாட்சிகளும் வழக்கறிஞர் திருமூர்த்தி அவர்களால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டனர். வழக்கில் குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் போதுமான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்றும், குற்றம் சாட்டப்பட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் அன்றாடம் மக்கள் நலன் சார்ந்த சமூகப் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருபவர்கள் என்பதாலும், அவர்கள் மீது வழக்கு புனையப்பட்டுள்ளதாக வழக்கறிஞர் திருமூர்த்தி அவர்கள் தோழர்கள் சார்பில் வழக்கை நடத்தி வந்தார்.

இந்நிலையில் (14.07.2026), சென்னை சிங்காரவேலர் மாளிகை 15-ஆவது கூடுதல் அமர்வு நீதிமன்றம், குற்றச்சாட்டுகளை நிரூபிக்க போதுமான ஆதாரங்கள் இல்லையெனக் கண்டறிந்து, மேற்கண்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட கழகத் தோழர்கள் அனைவரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தது. தீர்ப்பு வந்தவுடன் தோழர்கள் பத்ரிநாராயணன் படிப்பகத்தில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர். வழக்கறிஞர் திருமூர்த்தி அவர்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

**தலையங்கம்**

# பரப்புரைக்கு தயாராவீர்

தமிழ்நாட்டில் சமூகத்திலும் வாழ்க்கையிலும் மாற்றங்கள் வந்தாலும் ஜாதி கட்டமைப்பு குலைந்துவிடவில்லை. பல்வேறு புதிய வடிவங்களில் மீண்டும் மீண்டும் புதுப்பித்துக் கொண்டு வருகின்றன. ஒவ்வொரு ஜாதிக் குழுவும் தனக்கான பெருமைகளைப் பேசுகிறது. ஜாதிச் சங்கங்களை அமைக்கிறார்கள்; ஒவ்வொரு ஜாதிக்கும் திருமணத்திற்கு வரன் தேடித்தரும் அமைப்புகள் வந்துவிட்டன; தொலைக்காட்சிகளிலும் அவை விளம்பரம் செய்கின்றன.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் குற்றவியல் துறை தென் மாவட்டங்களில் மாணவர்களிடையே ஜாதி குறித்து ஆய்வு ஒன்றை அண்மையில் நடத்திய போது அதிர்ச்சியான தகவல்கள் வெளிவந்துள்ளன. பள்ளி கல்லூரி மாணவர்களிடையே 50% விழுக்காட்டிற்கும் மேல் ஜாதி உணர்வு இருப்பதையும் சமூக வலைதளங்களில் அவர்கள் ஜாதிப் பெருமைகளை பதிவு செய்து வருவதையும் அந்த ஆய்வு கூறுகிறது.

தமிழ்நாட்டில் பாஜக தனது ‘இந்துத்துவா’ அரசியலை வளர்ப்பதற்கு ஜாதிச் சங்கங்களை பெருமளவில் பயன்படுத்துகிறது. அரசியல் கட்சிகள் சமுதாயத்தில் ஜாதிக் கட்டமைப்பு தகர்க்கப்பட வேண்டும் என்று கவலைப்படவே இல்லை. இதில் அனைத்து அரசியல் கட்சிகளும் அடக்கம். அரசியலுக்குள் நுழைந்த தலித் அமைப்புகள் ஜாதிக் கலவரம், ஆணவப் படுகொலை நடக்கும் போது கண்டனம் ஆர்ப்பாட்டங்களோடு தங்கள் ஜாதி எதிர்ப்பு கடமைகளை முடித்துக் கொள்கின்றனர். அம்பேத்கரின் ஜாதி எதிர்ப்பு சிந்தனைகளை மக்களிடம் கொண்டு செல்லும் இயக்கங்களை நடத்துவது இல்லை; அவர்கள் நடத்த வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்!

திராவிடர் விடுதலைக் கழகம் தொடர்ந்து ஜாதி எதிர்ப்பு இயக்கங்களை நடத்தி வருகிறது. ஜாதி வாழ்வியல் எதிர்ப்புப் பயணம், அகமண முறை எதிர்ப்பு பரப்புரை, இரட்டை குவளை உடைப்பு போராட்டம், ஆணவப் படுகொலைகள் எதிர்ப்பு இயக்கம் என்று தொடர்ச்சியாக திராவிடர் விடுதலைக் கழகம் களமாடி வருகிறது. சுயஜாதி அடையாளங்களில் இருந்து விடுவித்துக் கொண்டு சுயஜாதி மறுப்பாளர்களாக ஜாதி எதிர்ப்பு இயக்கங்களை நடத்தி வருவதுதான் திராவிடர் விடுதலைக் கழகத்தின் தனித்துவம்!

தமிழ்நாட்டில் ஜாதிக் கலவரங்கள் நடக்கும்போதும், ஆணவப் படுகொலை நடக்கும்போதும் தொடர்ந்து திராவிடர் விடுதலைக் கழகம் தனது கண்டனங்களையும் போராட்டங்களையும் நடத்தி வந்திருக்கிறது. அதை நாம் பட்டியலிட முடியும்! உதாரணத்திற்கு சில:

★ பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த சங்கரும் கள்ளர் சமூகத்தைச் சேர்ந்த கவுசல்யாவும் ஒருவரை ஒருவர் விரும்பி ஜாதி கடந்து வாழ விரும்பினர். அதற்காக பட்டப்பகலில் 2016 மார்ச்-13, அன்று உடுமலைபேட்டையில் கவுசல்யா கண்முன்னே சங்கர் படுகொலை செய்யப்பட்டார். திராவிடர் விடுதலைக் கழகம் நாடு முழுதும் கண்டன இயக்கங்களை நடத்தியது. கவுசல்யாவுக்கு உறுதியான ஆதரவைக் காட்டியது. ஒரு பெரியாரிய பெண்ணாக கவுசல்யா மாறினார்.

★ ஜாதி கடந்து வாழ விரும்பிய திவ்யா-இளவரசன் இணையர்களை ஜாதிவெறியர்கள் பிரித்தார்கள். காவல்துறை பாதுகாப்போடு திருமணம் செய்து 45 நாட்கள் வாழ்க்கையை நடத்திய பிறகு, வன்னியர் சங்கம் களத்தில் இறங்கி கலவரத்தை உருவாக்கி கடைசியில் இளவரசன் ரயிலில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்ட கதையோடு முடித்துவிட்டார்கள். திராவிடர் விடுதலைக் கழகம் இந்த ஜாதி வெறிக்கு எதிராக நாடு முழுவதும் போராட்டங்களை நடத்தியது.

★ கொங்கு மண்டலத்தில் தீரன் சின்னமலை கவுண்டர் பேரவை என்ற ஜாதி சங்கத் தலைவன் யுவராஜ், ஜாதிமறுப்பு காதலர்களை மிரட்டி பிரிப்பதை தொழிலாக கொண்டவன். கோகுல்ராஜ் என்ற தலித் இளைஞர் படுகொலையில் கைது செய்யப்பட்டார். அப்போது கழகம் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பேசிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி யுவராஜை தேடப்படும் குற்றவாளியாக அறிவித்து சொத்துக்களைப் பறிமுதல் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார். அதற்குப் பிறகுதான் அடுத்த இரண்டு நாட்களில் காவல்துறை அவனது சொத்துக்களை முடக்கியது.

★ பா.ம.க நிறுவனர் மருத்துவர். ராமதாஸ் தலித் அல்லாதோர் கூட்டணி ஒன்றை உருவாக்கி, தலித் எதிர்ப்பு இயக்கம் நடத்திய போது அந்த கூட்டங்கள் நடந்த ஊர்களில் எதிர்ப்பு கண்டன ஆர்பாட்டங்களை நடத்தி திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

★ வைக்கம் நூற்றாண்டில் வெற்றிவிழா கொண்டாடவில்லை. மாறாக திராவிடர் விடுதலைக் கழகம் கோவை, திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் பின்பற்றப்படும் தீண்டாமைகளை நேரில் களஆய்வு செய்து பட்டியல் தாயாரித்து, தமிழ்நாடு அரசின் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் ஆணையத்திடம் வழங்கியது. இதனால் தீண்டாமையை பின்பற்றிய தேனீர் கடைகள் மூடப்பட்டன.

★ கோவை மாவட்டம் கெம்பனூர் கிராமத்தில் அருந்ததியர் பகுதிக்கு வராத பேருந்துகள் கழகத்தின் தொடர் போராட்டம் காரணமாக ஊருக்குள் நுழைந்தன. இப்படி நீண்ட பட்டியலிட முடியும்.

★ இப்போதும் ஜாதி வெறியர்கள் எதிர்ப்புகளை எதிர் கொண்டு ஜாதி மறுப்பு இணையர்களுக்கு கழகத் தோழர்கள் திருமணங்களை நடத்துகிறார்கள். குறிப்பாக மேட்டூர் அருகே உள்ள காவலாண்டியூர் திராவிடர் விடுதலைக் கழகம் ஜாதி மறுப்பு இணையர்களுக்கு புகலிடமாக இருக்கிறது. கழகத் தோழர் காவலாண்டியூர் ஈஸ்வரன் ஜாதிவெறியர்களின் தாக்குதலுக்கு உள்ளானார்.

★ சென்னையில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைமை அலுவலகம் ஜாதி மறுப்புத் திருமணம் செய்ய விரும்பும் இளைஞர்களின் பாதுகாப்பு மய்யமாகி ஏராளமான ஜாதி மறுப்புத் திருமணங்களை நடத்தி வருகிறது. இப்படி ஜாதி எதிர்ப்பை உதட்டளவில் பேசாமல் களத்தில் செயல்படும் திராவிடர் விடுதலைக் கழகம் தான் இப்போது ஜாதியத் தடைகளை உடைப்போம் என்ற முழக்கத்தோடு மக்களை சந்திக்க வருகிறது.

பரப்புரை வழியாக நிகழ்ந்த மக்கள் இயக்கங்கள்தான் வரலாறுகளை மாற்றியுள்ளன. தேர்தல் அரசியல் பக்கம் திரும்பாத பெரியார் நாள்தோறும் நிகழ்த்திய மேடைப் பேச்சுகள் பார்ப்பனிய ஆதிக்கத்தை நிலைகுலையச் செய்திருக்கிறது என்பது வரலாறு. அந்த வரலாற்றுத் தொடர்ச்சியாக தான் இப்போது இந்த பயணம் புறப்படுகிறது பயணத்தில் பங்கேற்கும் தோழர்களின் உழைப்பு ஒருபோதும் வீணாகாது!

**தடைகளைத் தகர்ப்போம்!**

**தயாராவீர் தோழர்களே!..**

# ஜாதித் தடைகளை தகர்த்த 14,500 உடல் உறுப்புகள்!

*உடல் உறுப்புகளை கொடையாக வழங்குவதில் தமிழ்நாடு முன்னிலையில் நிற்கிறது. கடந்த ஆறு மாதங்களில் மரணம் அடைந்த 169 பேர்களது உறுப்புகள் கொடையாக பெறப்பட்டுள்ளன. கொடையாக பெறப்பட்ட 937 உறுப்புகள் உயிரோடு போராடியவர்களுக்குப் பொருத்தப்பட்டு உயிர் வாழ்க்கை தரப்பட்டுள்ளது என்று தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணைய செயலாளர் அறிவித்துள்ளார், இது ஆறு மாதங்களில் மட்டுமே பெறப்பட்டுள்ள கொடை. இது 2008-ஆம் ஆண்டு முதல் இதுவரை 2,490 பேரிடமிருந்து 14,533 உறுப்புகள் கொடையாக பெறப்பட்டு மனித உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. உடலுக்கோ உடல் உறுப்புக்கோ ஜாதி அடையாளங்கள் இல்லை! உறுப்புகள் ஜாதி பார்ப்பதில்லை!*

*எந்த ஒரு ஜாதி பற்றாளரும் பிற ஜாதியினரின் உறுப்பு தங்கள் குடும்ப உறுப்பினருக்கு தேவை இல்லை என்று மறுப்பதும் இல்லை. எப்போது கிடைக்கும் என்று துடிக்கிறார்கள். நோய்களும் ஜாதி பார்ப்பதில்லை; சிகிச்சைகளுக்கும் ஜாதி இல்லை; எல்லா ஜாதியினருக்கும் ஒரே சிகிச்சைதான்! ஜாதி கடந்து உறுப்புகள் பொருத்துவதை மகிழ்ச்சியுடன் ஏற்கிறார்கள். ஆனால் ஜாதி கடந்து உள்ளங்கள் பொருந்தும் போது வெறுக்கிறார்கள்; அரிவாள் தூக்குகிறார்கள். மனித உறுப்புகள் உயிரைக் காக்கின்றன. மனித ஜாதிகள் உயிரைப் பறிக்கின்றன இதுதான் பார்ப்பனியத்தின் சனாதன வாழ்க்கை!*

# ஜாதிவாரி கணக்கெடுப்பை வலியுறுத்தி கருத்தரங்கம்!

*ஓபிசி மக்கள் உரிமை கட்சியின் சார்பில், கடந்த ஜூலை-12, (ஞாயிறன்று), சென்னை ராயப்பேட்டை இ.என். சேஷா மகாலில், “இதர பிற்படுத்தப்பட்ட சமூகங்கள் மீதான ஜாதி கணக்கெடுப்பின் முக்கியத்துவம் மற்றும் அதன் விளைவுகள்” எனும் தலைப்பில் முழுநாள் கருத்தரங்கம் நடைபெற்றது. மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன், திருவல்லிக்கேணி தோழர் அன்பரசு உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். முதலாவதாக பேசிய தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தலைவர் சூரஜ் மண்டல்; பிற்படுத்தப்பட்டோரை பாஜக ஏமாற்றுவது குறித்தும், பார்ப்பனர் ஒற்றுமை - ஓபிசி ஒற்றுமையின்மை குறித்தும் உரையாற்றினார்.*

*அடுத்ததாக உரையாற்றிய, இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் அசோக் வர்தன், மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் ஓபிசி ஜாதிகளின் எண்ணிக்கையை 46 லட்சமாக உயர்த்திக்காட்டும் மோசடிகளைச் சுட்டிக்காட்டினார். நீதிபதிகள், அரசுத்துறைச் செயலாளர்கள், பேராசிரியர்கள், ஊடகவியலாளர்கள், பெருநிறுவனங்களின் நிர்வாகக் குழுவினர் பெரும்பாலும் முன்னேறிய ஜாதிகளாகவே இருப்பதை வினவினார். நீதிமன்றங்களில் புள்ளிவிவரங்களை வழங்காமல், பிற்படுத்தப்பட்டோர் உரிமைக்கு மிகப்பெரிய தடையாக இருப்பது மோடி தான் என்றார். மேலும், திமுக அமைப்புச் செயலாளர் டிகேஎஸ் இளங்கோவன், அகில இந்திய ஓபிசி மாணவர்கள் சங்கத் தலைவர் கிரண் குமார், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தமிழ்நாடு பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர், கொமதேக பொதுச் செயலாளர் ஈ.ஆர். ஈஸ்வரன் உள்ளிட்ட பலர் பங்கேற்று தங்கள் கருத்துக்களை பதிவு செய்தனர்.*

# கனவுகளில் வந்த ‘ராமன்’

## களவாடலை ஏன் தடுக்கவில்லை!

*இந்து இந்தியாவின் தேசியக் கடவுளாக பகவான் பாலராமனை முன்னிறுத்தியது ஒன்றிய பாஜக ஆட்சி. அந்தத் தேசியக் கடவுளுக்கே நாமம் போட்டு இருக்கிறார்கள் ராமரின் பக்தர்கள். கோடிக்கணக்கான பக்தர்களின் காணிக்கைப் பணம் களவாடப்பட்டு இருக்கிறது; வெள்ளி நகைகள் காணாமல் போயிருக்கின்றன. ஏப்ரல் மாதத்தில் இருந்து ஜூன் மாதம் வரை 70 முறை காணிக்கைப் பணத்தை களவாடியதை சிசிடிவி கேமராக்கள் படம் பிடித்துள்ளன. வேறு வழியின்றி உ.பி. ராமராஜ்யம் சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. இப்போது உச்சநீதிமன்றமே தலையிட்டு இதுவரை வாய்ப்பூட்டு போட்டுக் கொண்டிருக்கும் ஒன்றிய ஆட்சிக்கும் மாநில ஆட்சிக்கும் சிறப்பு புலனாய்வுக் குழுவுக்கும் விளக்கம் கேட்டு நோட்டீஸ் பிறப்பித்து இருக்கிறது.*

*பாபர் மசூதிக்குள் இந்து ராமன் கோயில் இருந்தது என்பதற்கான சான்றுகள் எதுவும் இல்லை என்றாலும் கூட, நம்பிக்கையின் அடிப்படையில் கோயில் கட்ட அனுமதிப்பதாக உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. தீர்ப்பு அளித்த தலைமை நீதிபதி தனது கனவில் ராமன் வந்து இந்தத் தீர்ப்பை வழங்கும்படி கூறினார் என்று கூறினார். இந்தக் கோயிலுக்கு அடிக்கல் நாட்டியவர் பிரதமர் ‘மோடி.’ கோயிலுக்கு கொடியேற்றம் செய்தவர் பிரதமர் ‘மோடி’ கோயில் முழுமையாகக் கட்டி முடிக்கப்படுவதற்கு முன்பே நாடாளுமன்றத் தேர்தலுக்குள் கோயிலைத் திறந்து விட வேண்டும் என்று அவசரம் காட்டி கோயிலுக்குள் பாலராமனை நிறுவும் சடங்கை நடத்தியவர் ‘மோடி’ இந்த கோயிலுக்கான அறக்கட்டளையை நிறுவியவரும் ‘மோடி’தான்.*

*இந்த அறக்கட்டளைக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் இருந்து விதிவிலக்கு தந்த வரும் ‘மோடி’தான் ஆனால் இந்த ஊழல் திருட்டு குறித்து இதுவரை வாய் திறக்காதவரும் ‘மோடி’தான். இப்போது உச்ச நீதிமன்றமே தலையிட்டு ஒன்றிய ஆட்சியின் விளக்கத்தைக் கேட்டு இருக்கிறது. பகவான் ராமனே தன்னுடைய கனவில் வந்து கோயில் திறப்புக்கான தேதியை அறிவித்துவிட்டு போனார் என்று பேசினார் மோடி. தலைமை நீதிபதி கனவிலும் மோடியின் கனவிலும் வந்த ராமன் இப்போது மோடி கனவில் வந்து தனது காணிக்கைகள் கொள்ளையடிக்கப்படுவதை முறையிட்டதாக மோடி இதுவரை வாய் திறக்கவில்லை. பகவான் ராமனின் உண்மையான பக்தர்களே கோயில் நிர்வாகிகளாக ஊழியர்களாக சலித்து சலித்து தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.*

*இந்து பக்தர்களின் காணிக்கையை உண்மையான இந்து பக்தர்களே சூறையாடுகிறார்கள் என்றால், இது இந்து அவமதிப்பு பட்டியலில் சேராதா? கோயிலைக் கட்டுவதே தனது ‘பிறவிப்பயன்’ என்று சபதம் ஏற்று செயல்பட்ட பிரதமர் மோடி வாய்மூடி கிடப்பது ஏன்?*

*இந்துக்களை புண்படுத்துவதாக வீதிகளில் இறங்கிப் போராடுவதையும், நீதிமன்றங்களில் வழக்கு தொடுப்பதையும் முழு நேர வேலையாக செய்து கொண்டிருந்த கடவுள்களின் **‘போர்க்கள நாயகர்கள் எங்கே போனார்கள்?***

***‘கண்டா வரச் சொல்லுங்க!.’***

# பரப்புரைப் பயண களப்பணியில் ஏற்பாட்டு குழுவினர்

திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக ஜாதியில் திருமணம், மதத்தில் பார்ப்பனியம், வாழ்வில் மூடநம்பிக்கை இவற்றிற்கு எதிரான “மாற்றத்தை நோக்கிய வாழ்வியல் பரப்புரைப் பயணம்” என்கின்ற தலைப்பில் வருகின்ற ஆகஸ்ட் 6-ஆம் நாள் முதல் தமிழ்நாட்டில் மூன்று முனைகளிலிருந்து தொடங்கும் பரப்புரை நடைபெற உள்ளது. இந்தப் பயணத்திற்கான முன்னேற்பாட்டுப் பணிகளை கழகப் பொருளாளர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், தலைமைக்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம் ஆகியோர் அப்பகுதிகளுக்குச் சென்று கலந்தாய்வு செய்தனர்.








*08.07.2026* அன்று மதியம் நிறைவு மாநாடு நடைபெற உள்ள காரைக்குடிக்கு சென்று கழக மாவட்டப் பொறுப்பாளர் முத்துவை சந்தித்து மாநாடு நடைபெற உள்ள இடத்தையும் பேரணி தொடங்கும் இடத்தையும் பார்வையிட்டு இறுதி செய்தனர். மாநாட்டின் ஏற்பாடு குறித்தும் தோழர்கள் தங்குமிடம், உணவு மற்றும் மாநாட்டிற்கான விளம்பரம் செய்வது குறித்தும் ஆலோசனை வழங்கினர். மாலை 05.00 மணியளவில் பேராவூரணி சென்று தலைமைக்குழு உறுப்பினர் திருவேங்கடம் அவர்களை சந்தித்து பேராவூரணியில் 06.08.2026 அன்று கழகத் தலைவர் பங்கேற்கும் பரப்புரைப் பயண தொடக்கவிழா பொதுக்கூட்டத்திற்கான ஏற்பாடுகள் குறித்து கேட்டறிந்தனர் பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தையும் பார்வையிட்டனர்.

*07.08.2026* அன்று பரப்புரைக் கூட்டங்கள் நடைபெற உள்ள உடையநாடு, மல்லிப்பட்டினம், மற்றும் அன்றைய நிறைவு கூட்டம் நடைபெற உள்ள அதிராம்பட்டினம் ஆகிய இடங்களில் பரப்புரைக் கூட்டம் நடைபெற உள்ள இடங்களை பார்வையிட்டு இறுதி செய்தனர். இந்நிகழ்வில் பேராவூரணி திருவேங்கடம், கலைச்செல்வன், அதிராம்பட்டினம் கவிமணி ஆகியோர் தலைமைக் கழகக்குழுவினருடன் சென்றனர்.

*09.07.2026* அன்று காலை அதிராம்பட்டினத்தில் கவிமணியின் தந்தையார் எதிர்பாராத விதமாக காலமானார் என்ற செய்தியறிந்ததும் காலையில் அதிராம்பட்டினம் சென்று அய்யா அவர்களுக்கு பொருளாளர் துரைசாமி அவர்களும், பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் அவர்களும் மலர்மாலை வைத்து இறுதி மரியாதை செலுத்தினர். தலைமைக்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், சித.திருவேங்கடம், கு.பாரி, வடசேரி சிவசுப்பிரமணியம், திருப்பூர் அய்யப்பன் ஆகியோர் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டனர். பரப்புரைப் பயணம் நடைபெற உள்ள இடங்களான துவரங்குறிச்சி, பரவக்கோட்டை, மதுக்கூர், வடசேரி, மன்னார்குடி ஆகிய இடங்களைப் பார்வையிட்டு இறுதி செய்தனர். நீடாமங்கலம், நாச்சியார் கோவில், கும்பகோணம் ஆகிய பகுதிகளுக்குச் சென்று பரப்புரை நடைபெற உள்ள இடங்களைத் தேர்வு செய்தனர். அதன் பின் உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ள தஞ்சை மாவட்டத் தலைவர் சாக்கோட்டை இளங்கோவன் அவர்களின் உடல்நலம் குறித்து விசாரித்தனர். அவ்வமயம் பல்வேறு திராவிடர் இயக்க நிகழ்வுகள் குறித்து பகிர்ந்து கொண்டார். நாச்சியார் கோவில் தோழர் வெங்கடேசன் அவர்கள் தான் புதியதாக கட்டிய வீடு திறப்பு விழா மகிழ்வாக கழக ஏடான புரட்சிப் பெரியார் முழக்கம் இதழுக்கு ரூபாய் 5000/- த்தை கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமியிடம் வழங்கினார்.

*10.07.2026* அன்று காலை சிவகங்கை சென்று ஆசிரியர் புலவர் இளங்கோவை சந்தித்து 11.08.2026 அன்று சிவகங்கையில் பரப்புரை நடைபெற உள்ள பகுதியினைத் தேர்வு செய்து உறுதிபடுத்தினர். ஆசிரியர் இளங்கோ தேனீர் வழங்கி உபசரித்ததோடு, முன் ஏற்பாட்டு குழுவினர் வழி செலவிற்காக ரூபாய் 5000/- வழங்கினார். சுயமரியாதை இயக்க முன்னணித் தலைவர்களில் ஒருவரான சிவகங்கை ராமச்சந்திரன் அவர்கள் நினைவாக பேரறிஞர் அண்ணா அவர்களால் திறக்கப்பட்ட பூங்காவில் உள்ள இராமச்சந்தினார் சிலையைத் தோழர்கள் பார்வையிட்டனர்.

மதியம் மதுரையில் மாவட்டக் காப்பாளர் தளபதி அவர்களின் இல்லத்தில் மாவட்டத் தலைவர் காமாட்சி பாண்டி, மதுரை முருகேசன் ஆகியோரிடம் பரப்புரைச் செய்யும் இடம் மற்றும் தோழர்கள் தங்குமிடம் குறித்தும் கலந்து ஆலோசித்து இறுதி செய்யப்பட்டது. மூன்று நாட்கள் தோழர்களைச் சந்தித்து பரப்புரைப் பயணம் குறித்து ஆலோசனை மற்றும் தோழர்கள் தங்குமிடம், உணவு ஏற்பாடுகள் குறித்தும் ஆலோசனை வழங்கியதும் தோழர்கள் உற்சாகமாக பயணம் வெற்றி பெற பணியாற்ற உறுதியளித்ததும் பரப்புரைப் பயணம் - மாநாடு சிறப்பாக அமையும் என்ற நம்பிக்கையில் தலைமைக் கழகக் குழுவினர் விடைபெற்றனர். மூன்று நாட்கள் நடைபெற்ற கலந்தாய்வில் தலைமைக் குழு உறுப்பினருடன் திருப்பூர் வடக்கு மாவட்ட அமைப்பாளர் அய்யப்பன் அவர்களும் உடன் இருந்தார்.

# பார்ப்பன சடங்குகளை ஒதுக்கிய பி.என் சண்முகம் நினைவேந்தல்!

மறைந்த பி. என் சண்முகம் அவர்களின் முதலாமாண்டு நினைவேந்தல் படத்திறப்பு நிகழ்வு ஜூலை-17, வெள்ளிக்கிழமை 12 மணி அளவில் திருப்பூர், பலவஞ்சிப்பாளையம் பகுதியில் உள்ள மறைந்த பி. என் சண்முகம் அவரது இல்லத்தில் நடைபெற்றது. சர்வேஸ்வரன் (அ.தி. மு.க) அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் துணைப் பொதுச்செயலாளர், பி.என் சண்முகம் அவர்களின் உறவினர் கா.சு. நாகராசன் பேசுகையில் என்னுடைய தந்தையார், தாயார் இறந்த பிறகு குடும்பத்தினர் ஏற்பாடு செய்திருந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் கலந்துகொண்டும், என் தாயார் மறைந்த பிறகு அவரின் உடலை மருத்துவக் கல்லூரிக்கு கொடையாக வழங்கியதைக் கண்டும், உயிரற்ற உடல் மருத்துவ மாணவர்களுக்கு இவ்வளவு பயன்படுகிறதா? என்பதை உணர்ந்து மறைந்த பி.என். சண்முகம் அவர்கள் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மருத்துவ ஆராய்ச்சிகளை மேற்கொள்ள பொது நல பார்வையிலும், தொலைநோக்குப் பார்வையிலும் சிந்தித்து உயிருடன் இருக்கும் போது உடற்கொடை வழங்கும் சான்றிதழை பூர்த்தி செய்து வழங்கினார். எங்கள் வீட்டில் நடக்கிற நல்லது, கெட்டது காரியங்களில் சடங்குகளைச் செய்யக்கூடிய உரிமை படைத்த பங்காளி குடும்பம்தான் அண்ணன் சண்முகம் அவர்களின் குடும்பம். அதனால் சடங்குகள் இல்லாத முறைக்காக அன்றைக்கு அவர் மிகவும் கோபித்துக் கொண்டார்.




### கொளத்தூர் மணி உரையின் தாக்கம்

தந்தையின் இறப்புக்குப் பிறகு அவரது நினைவேந்தல் படத்திறப்பு நிகழ்ச்சி தலைவர் கொளத்தூர் மணி அவர்களின் தலைமையில் நடந்த போது அண்ணன் சண்முகம் தலைவர் அவர்களின் உரையைக் கேட்டு கொஞ்சம் மனம் மாறினார். இதுவும் நன்றாகத்தான் இருக்கிறது என்று ஓரளவு சமாதானமாக சொல்லிவிட்டு வந்தார். நிகழ்ச்சி முடிந்து விடைபெறும்போது அண்ணன் சண்முகம் அவர்கள் என்னிடம் வந்து, அப்பா,அம்மா ரெண்டு பேரையும் மிகுந்த மரியாதையோடு வழி அனுப்பி வைத்திருக்கிறோம். சடங்கு சம்பிரதாயங்கள் இல்லை என்கிற சங்கடம் எனக்கு முதலில் இருந்தது. அது இப்போது இல்லை. மணி அண்ணன் பேசியது எனக்கு ரொம்ப புடிச்சுது. நாளைக்கு, எதிர்காலத்தில் நான் இறந்து போனாலும் என்னையும் இதே போல மருத்துவக் கல்லூரிக்கு கொடுத்து விட்டு, தலைவர் கொளத்தூர் மணி அவர்களை அழைத்து வந்து இது போல படத்திறப்பு நிகழ்ச்சியை நீதான் நடத்த வேண்டும் என்று என்னிடம் அவர் சொன்னார். ஆனால், கடந்த ஆண்டு ஜூலை முதல் வாரம் அண்ணன் சண்முகம் அவர்களுடைய உடல் நிலை சீர்கெட்டு மருத்துவமனையில் கவலைக்கிடமாக இருக்கிறார். அவரைப் பார்ப்பதற்காக நாங்கள் வருகிறோம். அப்போது அண்ணி அவர்களும் தம்பி கோபிநாத்தும் சங்கீதாவும் எல்லோரும் என்னிடம் வந்து, அப்பா இறந்து போனால் அப்பாவுடைய உடலை மருத்துவக் கல்லூரிக்குக் கொடுக்க வேண்டும் என்பது அப்பாவின் விருப்பம். அப்படியே செய்துவிடலாம். அது மட்டுமல்ல தலைவர் கொளத்தூர் மணி அவர்களை அழைத்து வந்து அப்பாவுடைய படத்தை திறந்து வைத்து நினைவு நிகழ்ச்சியையும் நடத்த வேண்டும் என்பதும் அப்பாவுடைய விருப்பம்; அப்படியே செய்துவிடலாம் சித்தப்பா என்று சொன்னார்கள். அப்போது உள்ளபடியே நான் நெகிழ்ந்து போனேன். ஏதோ உணர்ச்சி மேலிட்டு அன்றைக்கு அவர் பேசியதாக நான் கருதியது பெரிய தவறாகப் போய்விட்டது. அண்ணன் சண்முகம் அவர்கள் உளப்பூர்வமாக உணர்ந்து இந்த நடைமுறையை ஏற்றுக் கொண்டுதான் இவ்வளவு நாளும் இருந்திருக்கிறார்.

அதுவும் அண்ணி அவர்களிடத்தில் கூட இந்தக் கருத்தை வலியுறுத்தி சொல்லி இருக்கிறார். இருவரில் யார் முதலில் இறந்தாலும் இன்னொருவர் மருத்துவக் கல்லூரிக்கு கொடுத்து இதுபோல் படத்திறப்பு நடத்த வேண்டும் என்கிற முடிவை இருவருமே எடுத்திருக்கிறார்கள் அதை தங்கள் மகன் மகளிடத்திலும் உறுதிப்படுத்தி இருக்கிறார்கள் என்று தெரிந்த போது எனக்கு ஒரு பக்கம் மகிழ்ச்சியாகவும் இருந்தது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் மறைந்த பி. என் சண்முகம் அவர்களின் படத்தை திறந்து வைத்து புகழ் வணக்கம் செலுத்தினார். அவர் பேசுகையில் அரசியலால் அவர் அண்ணா தி.மு.க; அதுவும் அக்கட்சியில் 40 ஆண்டுகளாய் பொறுப்புகள் வகித்தவர். நம்பிக்கையில் அவர் நெற்றியில் திருநீற்றுக் கீற்றுடன் இருந்த ஆத்திகர். என்றாலும் சரியென்று பட்டதை நடைமுறை படுத்தத் துணிந்த அவரது நேர்மை போற்றத்தக்கது; அனைவருக்கும் வழிக்காட்டக் கூடிய ஒன்று.

சடங்குகள் என்ற பெயரால் புரியாததை செய்யாதீர்கள், அப்படி செய்தால் நம்மவர்களைக் கொண்டு தமிழ் மொழியில் செய்யுங்கள் எனவும், உடற்கொடை அல்லது விழிக்கொடை செய்யுங்கள் அவற்றை ஊக்கப்படுத்துங்கள் என இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து பி. என் சண்முகம் அவர்களின் உடலை அரசு மருத்துவ கல்லூரிக்கு கொடையாக வழங்கிய அவரது குடும்பத்தைப் பாராட்டி நினைவேந்தல் உரையாற்றினார்.

துரைசாமி (கழகப் பொருளாளர்), சாந்தகுமார் (பெரியாரியல் தோழர் அறக்கட்டளையின் தலைவர்), (தி.மு.க வார்டு செயலாளர்) நேதாஜி கண்ணன், ஜனார்தனன் (அ.தி. மு.க), சர்வேஷ்வரன் (எம். ஜி.ஆர் மன்ற திருப்பூர் மாவட்ட இணைச் செயலாளர்), மணி ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினர். மறைந்த பி. என் சண்முகம் அவர்களின் பேரன் கார்த்தீஸ் நன்றியுரையாற்றினார்.இந்நிகழ்வில் முகில் ராசு (மாவட்டத் தலைவர்), தனபால் (மாநகரத் தலைவர்), மாதவன் (மாநகரச் செயலாளர்), ராமசாமி (தெற்கு பகுதி செயலாளர்), அய்யப்பன் (வடக்கு ஒன்றிய அமைப்பாளர்) மற்றும் தோழர்கள் குணா, ஆறுமுகம், ராஜ்குமார், சரத்குமார், மோகன், அர்சிதா மற்றும் சண்முகம் அவர்களின் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# தயாராகிறது சேலம் மாவட்டம்!



சேலம் மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் ஜூலை-17, வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணியளவில் மேட்டூர் பெரியார் படிப்பகத்தில் மேட்டூர் நகரத் தலைவர் மார்டின் தலைமையில் நடைபெற்றது. கலந்துரையாடல் கூட்டத்தில் எதிர்வரும் ஆகஸ்ட்-6 முதல் 12 வரை நடைபெற இருக்கும் “மாற்றத்தை நோக்கிய வாழ்வியல் பரப்புரைப் பயணம்” சிறப்பாக நடைபெற சேலம் மாவட்டக் கழகம் முழு ஒத்துழைப்பை வழங்குவது என்றும், சேலம்-நாகர்கோவில் பயணக் குழுவின் திட்டம் குறித்தும் விவாதிக்கப்பட்டது. சேலம் அணியின் இசைக்குழு, கடைவீதி வசூல், புத்தக விற்பனை, ஊடக பிரிவு, பேச்சாளர்கள் பட்டியல் குறித்தும் பயணத்திற்கான நன்கொடை திரட்டுதல் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. இதில் சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராஜ், சேலம் மாவட்ட பொருளாளர் சம்பத், மாவட்ட அமைப்பாளர் அண்ணாதுரை, மேட்டூர் நகரச் செயலாளர் குமரப்பா, சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், மாவட்ட இளைஞரணி செயலாளர் பிரபாகரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தங்கதுரை, சேலம் மாநகர அமைப்பாளர் தேவராஜ், வனவாசி நகரச் செயலாளர் உமாசங்கர், தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர்கள் நாகராஜ், கவியரசு, கொளத்தூர் பகுதி தோழர்கள் கணேசன், செந்தமிழ் கலை அமுதன், மேட்டூர் பகுதி தோழர்கள் அம்ஜத்கான், காளியப்பன், கிட்டு, ரவி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**இசைக்குழு:** காளியப்பன், கோவிந்தராஜ், சீனி, அண்ணாதுரை, சித்திரை சேனன்.

**ஒலி மற்றும் ஒளி:** சந்திரசேகர், கவியரசு, செந்தமிழ் கலையமுதன்.

**புத்தக விற்பனை:** தங்கதுரை.

**கடை வீதி வசூல்:** கணேசன், தேவராஜ், கோகுல், முத்துராஜ், ராமச்சந்திரன், நங்கவள்ளி கண்ணன், செந்தில் வனவாசி, பிரபாகரன், அம்ஜத், கிருஷ்ணன்.

**ஊடகப் பிரிவு:** பிரபாகரன், கிருஷ்ணன்

**பேச்சாளர்கள்:** பால்.பிரபாகரன், நங்கவள்ளி அன்பு, ஆனந்தி, உமாசங்கர், கணபதி, ஆனந்த், கே.ஆர்.தோப்பூர் கண்ணன்.

# பார்ப்பனப் பிடியில் இந்துமதம்

## ஏழை இந்துக்களை ஒதுக்கும் ‘ஏழுமலையான்’

திருப்பதி ஏழுமலையானுக்கு ஜூலை-16, அன்று ஒரே நாளில் மட்டும் 97 கோடி ரூபாய் காணிக்கையாக வந்திருக்கிறது. இதற்கான காரணமும் இப்போது வெளிவந்து இருக்கிறது. ஏழுமலையானுக்கு தொடர்ந்து நன்கொடை வழங்குகிறவர்களின் பட்டியல் ஒன்று இருக்கிறது. இதில் 1.97 லட்சம் பேர் இடம் பெற்றிருக்கிறார்கள். இவர்களுக்கு மட்டும் திருப்பதி ஏழுமலையான் கூடுதலாக தரிசனங்களை வழங்குவார்.




எவ்வளவு அதிகமான தொகை நன்கொடை வழங்குகிறார்களோ அவர்களுக்கு மட்டும் தரிசனங்களில் கூடுதல் சலுகைகள் வழங்கப்படுகின்றன. சிறப்பு தரிசனம்; கருவறைக்கு அருகில் உள்ள குறுக்கு வழி வழியாக அனுமதி; பிரேக் அப் தரிசனம்; விடியற்காலை தரிசனம்; சுப்ரபாத சேவை; கல்யாண உற்சவத்தில் அனுமதி. இவை தவிர லட்டு பட்டு வஸ்திரங்கள், தங்கம் மற்றும் வெள்ளி நாணய பரிசுகள், தங்குமிட வசதிகள் எல்லாமும் கிடைக்கும். இந்தச் சலுகைகளில் புதிய மாற்றங்கள் ஜூலை-16, முதல் அமுலுக்கு வந்தன.

இதன்படி நன்கொடையாளர்கள் மேலும் புதிதாக நன்கொடை அளித்தால் மட்டுமே பழைய சலுகைகள் அனுமதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதால் நேற்று ஒரே நாளில் 97 கோடி ரூபாய் காணிக்கையாக வந்திருக்கிறது. பலர் லட்சக்கணக்கிலும் கோடிக்கணக்கிலும் நன்கொடைகளை வாரி வழங்கி இருக்கின்றனர். தங்களுக்கான ஏழுமலையான் சிறப்பு தரிசனங்களை கூடுதலாக பணத்தைக் கொட்டி புதுப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஜாதியால் பாகுபடுத்தும் இந்து மதம் இப்படி பொருளாதாரத்திலும் பாகுபடுத்துவது என்ன நியாயம்? இதை ஏழுமலையான் அனுமதிக்கிறானா?

ஏழை இந்துக்களை விட கோடீஸ்வர இந்துக்களுக்கு தான் ஏழுமலையானின் கருணையும் சிறப்பு தரிசனமும் கிடைக்கும் என்பதுதான் இந்து தர்மமா?

அதிகாரிகளுக்கும் அமைச்சர்களுக்கும் லஞ்சம் கொடுத்து குறுக்கு வழியில் காரியங்களைச் சாதிப்பது குற்றம் என்று சொன்னால் நன்கொடை கொடுத்து ஏழுமலையானின் சிறப்பு தரிசனத்தை குறுக்கு வழியில் பெறுவதற்கு என்ன பெயர்? இது கடவுளுக்குத் தரும் லஞ்சம் அல்லவா?

கோயில் சொத்துக்களையும் நகைகளையும் கொள்ளையடிப்பது மட்டும் ஊழல்அல்ல; பணக்கார இந்துக்களுக்கும் பார்ப்பன அர்ச்சகர்களுக்கும் மட்டுமே பகவான் சிறப்பு காட்சிகளை தருவார் என்பதும் மிக மிக மோசமான ஆன்மீக ஊழல் தான்!

ஏழை எளிய இந்துக்களுக்கு ஒரு நீதி; பார்ப்பன கோடீஸ்வர இந்துக்களுக்கு ஒரு நீதி பேசுவது தான் சனாதன தர்மமா? பார்ப்பனியத்தின் பிடியில் இந்து மதம்"என்று இதைத்தான் கூறுகிறோம்!

# இந்தியைத் திணிக்காதீர் கழகம் மனு



சென்னை கே.கே நகர் அஞ்சலகத்தில், ஹிந்தியைத் திணிக்காமல் தமிழுக்கு முன்னுரிமை வழங்கக்கோரி, முதுநிலை கோட்ட கண்காணிப்பாளரிடம் மனு வழங்கப்பட்டது. மனுவை ஏற்றுக்கொண்டு, உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர்.

தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக்குழு உறுப்பினர் கு. அன்பு தனசேகர், சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, மாவட்டத் தலைவர் மா. வேழ வேந்தன், மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன், திருவல்லிக்கேணி பகுதித் தலைவர் சு. கோபிநாத், தோழர்கள் பாரி சிவா, அசோக் ஆகியோர் பங்கேற்றனர்.

# சென்னை, திருப்பூரில் காமராசர் சிலைக்கு மரியாதை



**திருப்பூர்:** மாவட்டக் கழகம் சார்பாக கல்வி வள்ளல் காமராஜர் அவர்களின் 123 வது பிறந்தநாளை போற்றும் விதமாக 15-07-2026 புதன்கிழமை காலை 9.30 மணி அளவில் அனுப்பர்பாளையம், நகராட்சி அருகில் அமைந்துள்ள கர்மவீரர் காமராசர் அவர்களின் சிலைக்கு கழகப் பொருளாளர் துரைசாமி தலைமையில் மாவட்டத் தலைவர் முகில் ராசு முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தபட்டது.

கழக சமூக ஊடகப் பொறுப்பாளர் பரிமளராசன் கர்மவீரர் காமராசர் அவர்கள் குறித்து கொள்கை முழக்கமிட தொடர்ந்து தோழர்கள் முழக்கமிட்டனர். நிகழ்வில் மாநகரத் தலைவர் தனபால், மாநகரச் செயலாளர் மாதவன், மாநகரத் துணைத் தலைவர் மாரிமுத்து, வடக்கு ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன் மற்றும் கழகத் தோழர்கள் சிரிஜா, இனியன், குணா, பரந்தாமன் ஆகியோர் பங்கேற்றனர்.

**சென்னை:** காமராஜர் பிறந்தநாளையொட்டி, மாவட்டக் கழகத்தின் சார்பில், ஜூலை-15 காலை 9 மணிக்கு, சென்னை சிம்சன் ஜிம்கானா கிளப் முன்புள்ள காமராசர் சிலைக்கு மாலை அணிவித்து, கொள்கை முழக்கமிட்டு தோழர்கள் மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்வில், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக் குழு உறுப்பினர் கு. அன்பு தனசேகர், சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, மாவட்டத் தலைவர் மா.வேழவேந்தன், மாவட்ட அமைப்பாளர்கள் ம.கி. எட்வின் பிரபாகரன், ந. தட்சிணாமூர்த்தி, மாவட்டத் துணைச் செயலாளர் ஆ.வ. வேலு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ப.அருண், திருவல்லிக்கேணி பகுதித் தலைவர் சு. கோபிநாத், பகுதி அமைப்பாளர்கள் த.நா. சூர்யா, எம்ஜிஆர் நகர் துரைராசு, சைதை சிவா, தமிழ்நாடு மாணவர் கழக ஒருங்கிணைப்பாளர் பேரன்பு மற்றும் தோழர்கள் சு. பிரகாஷ், சுகுமார், மனோகர், இரண்யா, மோகன், வீரா, எழிலரசன், தாமரை உள்ளிட்ட பல தோழர்கள் பங்கேற்றனர்.



Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : July 23 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran